Date.21.10.2024

கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம்)

விழுப்புரம்.

OS.24/2021

பி.வா.சா.1

**பெயர்-** திரு. பார்த்திபன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு உதவியாளர் அவர்களால் சத்தியபிராமணம் செய்விக்கப்பட்டார்.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் எனது தரப்பில் ஒரு பதிவு செய்யப்படாத உடன்படிக்கையை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். உடன்படிக்கையில் 1ஆம் சாட்சி சக்திவேல் கையொப்பமே இல்லை என்றும், அது சீல் வைக்கப்பட்டது போல் உள்ளது என்றால் தவறு. என் மகள் கீர்த்தனாவும் இதில் ஒரு சாட்சி கையெழுத்து போட்டுள்ளார் என்றால் சரிதான். நான் 3வது சாடசி சுரேந்தர் மற்றும் கீர்த்தனா ஆகியோர்கள் சேர்ந்து வாதியின் கையெழுத்தை ஜோடனை செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல தவறு. இந்த ஒப்பந்தப்படி வாதி தான் எனக்கு பணம் தரவேண்டும் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஒப்பந்தப்பத்திரத்தின் அசல் என்னிடம் தான் உள்ளது என்றால் அதை வாதியே எடுத்து சென்று விட்டார். எனக்கு தான் நீங்கள் பணம் தர வேண்டும் அசல் பத்திரம் என்னிடம் தான் இருக்க வேண்டும் என்று நான் கேட்கவில்லையா என்றால் அக்ரிமெண்ட் படி அவர் 3 காசோலைகளை முன்தேதியிட்டு 1ம் மாதம், 2ம் மாதம், 3ஆம் மாதம் என்று கொடுத்தார். எனவே நான் அவரிடம் ஒப்பந்தத்தை கொடுத்துவிட்டேன். அந்த 3 காசோலைகளின் மூலம் நான் வாதியிடம் ரூபாய். 28,00,000/- பணம் பெற்றுவிட்டு அதை ஏமாற்றும் நோக்கத்தில் வேறு வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 3ம் மாதம் கொடுத்த காசோலை பணம் வரவில்லை என்று அவர் 6ஆம் மாதம் திருத்தி கொடுத்தார். என் குமாரத்தியை இந்த வழக்கில் விசாரிக்க போகிறேனா என்றால் இல்லை. அவர் வெளிநாட்டில் உள்ளார். நான் என் குமாரத்தியை சாட்சி சொல்ல கூப்பிட்டேன் என்றும், அவர் இந்த ஒப்பந்தமே தவறு என்பதால் சாட்சி சொல்ல

மறுத்துவிட்டார் என்றும் எனவே நான் என் குமாரத்தி வெளிநாடு சென்றுவிட்டதாக பொய் கூறுகிறேன் என்றால் சரியல்ல தவறு. நான் விடுதலை சிறுத்தை கட்சியில் முன்னாள் மாவட்ட செயலளாராக இருந்தேன். 20 ஆண்டுகளாக பொறுப்பில் இருந்தேன். தற்போது எந்த பதவியிலும் இல்லை. சக்திவேலு என்பவரும் விடுதலை சிறுத்தைகள் கட்சியில் மாவட்ட செயலளராக இருந்தார். சுரேந்தர் என்பவரும் விடுதலை சிறுத்தைகள் கட்சியில் மாவட்ட செய்தி தொடர்பாளராக தற்போது வரையில் உள்ளார். நான் சாட்சி கையெழுத்து செய்த நபர்கள் அனைவரும் எனக்கு வேண்டிய நபர்களாக வைத்து ஜோடனை செய்து தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல தவறு.,